# நடைபாதைக்கு இடையூறாக இருந்த 189 வியாபாரிகள் மீது நடவடிக்கை

கோலாலம்பூர், டிச. 27-

நடைபாதைக்கு இடையூறாக இருந்ததற்காக கோலாலம்பூர் மாநகர் மன்றம் இவ்வாண்டு ஜனவரி முதல் நேற்று முன்தினம் வரை 189 வியாபாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்துள்ளது.

அங்கு மேசை, நாற்காலி, குடை உட்பட பல்வேறு பொருட்களை வைத்திருந்து பாதசாரிகளுக்கு பெரும் சிரமத்தை கொடுத்ததாக அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அதன் பொது உறவு, ஊடகப் பிரிவு கூறியது.

1974ஆம் ஆண்டு சாலை, கால்வாய், கட்டடச் சட்டத்தின் 46(1)(டி) பிரிவுகளின் கீழ் 2,641 நோட்டீஸ்கள் சார்வு செய்யப்பட்டதாகவும் அது கூறியது.

நடைபாதைகளில் வியாபாரிகள் மேசை, நாற்காலிகளை வைப்பதை அமலாக்கப் பிரிவினர் கடுமையாகக் கருவதாகவும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அப்பிரிவு வெளியிட்ட ஓர் அறிக்கையில் கூறியது.

இவ்வாண்டு ஜனவரி முதல் நேற்று வரை கோலாலம்பூர் மாநகர் மன்றம் 258 நடவடிக்கைகள் அல்லது பொருட்களை பறிமுதல் செய்துள்ளதாகவும் அது கூறியது.

தலைநகரில் வியாபாரிகள் பாதசாரிகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்தும் வகையில் நடைபாதைகளில் மேசை, நாற்காலி, குடைகளை நிறுத்தும் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்ந்து வருவதால் இந்நடவடிக்கை அவசியம் எனவும் அது கூறியது.

